بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

09 ஷவ்வால் 1440 ஹிஜ்ரி கமரி 13 இஹ்ஸான் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி 13 ஜூன் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اَوَّلَ بَيْتٍ وُّضِعَ لِلنَّاسِ لَلَّذِىْ بِبَكَّةَ مُبٰرَكًا وَّهُدًى لِّلْعٰلَمِيْنَ ۝ فِيْهِ اٰيٰتٌۢ بَيِّنٰتٌ مَّقَامُ اِبْرٰهِيْمَ ۚ وَمَنْ دَخَلَهٗ كَانَ اٰمِنًا

எல்லா மக்களு(டைய பயனு)க்காகவும் முதன் முதலாக உருவாக்கப்பெற்ற இல்லம் மக்காவிலுள்ளதாகும். அது எல்லா உலகங்களுக்கும் அருளுக்குரியதும் நேர்வழிக்குரியதுமா(ன இடமா)கும். அதில் ஒளிமயமான பல அடையாளங்கள் உள்ளன. (அது) இப்றாஹீம் நின்ற இடமாகும். அதில் நுழைபவர் அமைதி பெற்றவராகி விடுகின்றார். (3:97,98)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதன் எவ்வகையிலும் தற்பெருமையும் கர்வமும் கொள்ளாமல் இருப்பதே எனது பார்வையில் அவன் தூய்மை அடைவதற்கான சிறந்த வழிமுறையாகும். இதை விடச் சிறந்த வேறொரு வழிமுறை இருக்க முடியாது. மனிதன் தன்னை ஒன்றுமற்றவனாகக் கருதுவதுடன் முழுக்க முழுக்க தன்னை ஒரு பொருட்டாகக் கருதாமல் இருப்பதற்கே உண்மையான இறைஞானம் என்று பெயராகும்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

மனிதன் எவ்வகையிலும் தற்பெருமையும் கர்வமும் கொள்ளாமல் இருப்பதே எனது பார்வையில் அவன் தூய்மை அடைவதற்கான சிறந்த வழிமுறையாகும். இதை விடச் சிறந்த வேறொரு வழிமுறை இருக்க முடியாது. அறிவு, குடும்பம், செல்வம் ஆகிய எவ்வகையிலும் கர்வம் கொள்ளக் கூடாது. அல்லாஹ் எவருக்காவது கண்களை வழங்கும் போது இந்த இருள்களிலிருந்து இரட்சிப்பை வழங்குகின்ற ஒவ்வொரு ஒளியும் விண்ணிலிருந்துதான் வருகின்றது என்பதை அவர் கண்டு கொள்வார். மனிதன் எல்லா நேரத்திலும் விண்ணின் ஒளியின் தேவை உடையவனாக இருக்கின்றான். வானத்திலிருந்து வருகின்ற சூரியனின் ஒளி வராமல் கண்ணால் கூட பார்க்க முடியாது. இவ்வாறே எல்லா விதமான இருள்களையும் அகற்றக்கூடிய, மேலும் அதற்குப் பகரமாக இறையச்சம் மற்றும் தூய்மையின் ஒளியை உருவாக்குகின்ற அகத்தின் ஒளியும் வானத்திலிருந்தே வருகின்றது. மனிதனின் இறையச்சம், விசுவாசம், இறைவணக்கம், தூய்மை ஆகிய இவை அனைத்துமே வானத்திலிருந்தே வருகின்றன என்பதை உண்மையாகவே நான் உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன். மேலும் இது இறைவனின் அருளைச் சார்ந்திருக்கின்றது. அவன் விரும்பினால் அதை நிலைத்திருக்கச் செய்யலாம். அவன் விரும்பினால் அதை அகற்றி விடலாம்.

எனவே, மனிதன் தன்னை ஒன்றுமற்றவனாகக் கருதுவதுடன் முழுக்க முழுக்க தன்னை ஒரு பொருட்டாகக் கருதாமல் இருப்பதற்கே உண்மையான இறைஞானம் என்று பெயராகும். அவன் இறைவனின் சந்நிதியில் வீழ்ந்தவாறு பணிவுடனும், தாழ்மையுடனும் இறைவனின் அருளைக் கேட்க வேண்டும். நஃப்ஸின் உணர்வுகளை எரிக்கக்கூடிய மற்றும் அகத்தில் ஓர் ஒளியையும் நன்மைகளுக்கான ஆற்றலையும் வெப்பத்தையும் உருவாக்கக் கூடிய அந்த இறைஞானத்தின் ஒளியைக் கேட்க வேண்டும். பிறகு அவனது அருளால் அவனுக்கு பங்கு கிடைத்து விட்டால், மேலும் ஏதாவதொரு சமயத்தில் ஏதாவதொரு வகையிலான இலகுவான நிலைமை ஏற்பட்டு உள்ளத்திற்கு திருப்தி ஏற்பட்டு விட்டால் அதில் ஆணவமும், பெருமிதமும் கொள்ள வேண்டாம். மாறாக, அவனது தாழ்மையிலும் பணிவிலும் இன்னும் அதிகமாக முன்னேற்றம் ஏற்பட வேண்டும். ஏனென்றால், எந்த அளவு அவன் தன்னைத்தானே ஒன்றுமற்ற பொருளாகக் கருதுவானோ அந்த அளவுக்கு சிறந்த நிலைமைகளும் ஒளிகளும் இறைவனிடமிருந்து இறங்கும். அவை அவனுக்கு ஒளியையும் ஆற்றலையும் கொடுக்கும். மனிதன் இந்த கொள்கையை வைத்திருந்தால் அல்லாஹ்வின் அருளால் அவனது நல்லொழுக்க நிலைமை சிறப்பானதாக ஆகிவிடும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. உலகில் தன்னை ஒரு பொருட்டாகக் கருதுவதும் கூட அகம்பாவமாகும். பிறகு அது அவனை அதே நிலைமையில் இருப்பவனாக ஆக்கி விடுகின்றது. பிறகு மனிதனின் நிலை எப்படி ஆகிவிடுகின்றதென்றால் அவன் மற்றவர்கள் மீது சாபமிடுகின்றான். மேலும் அவர்களை அற்பமாகக் கருதுகின்றான். நான் இந்த விஷயங்களை மீண்டும் மீண்டும் கூறுகின்றேன் என்றால், இறைவன் இந்த ஜமாஅத்தை உருவாக்க விரும்பியதன் நோக்கமாக உலகில் தொலைந்துபோன உண்மையான இறைஞானத்தையும் இந்த காலத்தில் இல்லாத உண்மையான இறையச்சத்தையும் தூய்மையையும் மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்பதையே வைத்துள்ளான்.

பொதுவாக, அகங்காரம் உலகில் பரவியிருக்கின்றது. ஆலிம்கள் தங்களது அறிவின் பெருமையிலும் அகங்காரத்திலும் சிக்கியுள்ளனர். ஏழைகளைப் பார்த்தாலும் அவர்களின் நிலைமையும் கூட வேறு விதமாக ஆகிக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு தங்களைச் சீர்திருத்திக் கொள்கின்ற பணியே இல்லாமல் ஆகிவிட்டது. அவர்களது நோக்கமும் குறிக்கோளும் உடலின் எல்லைக்குட்பட்டதாக மட்டுமே இருக்கின்றது. அதற்காக அவர்கள் செய்கின்ற முயற்சிகளும் பயிற்சிகளும் கூட சற்று வேறு விதமாகவே இருக்கின்றன. உதாரணமாக, அர்ரா திக்ரு போன்றவற்றை அவர்கள் செய்கின்றனர். அவற்றைப் பற்றி நபித்துவத்தின் நீரூற்றிலிருந்து தெரிய வரவில்லை. உள்ளத்தைத் தூய்மையாக்குவதன் பக்கம் அவர்களுக்கு கவனமே இல்லை என்பதை நான் பார்க்கின்றேன். வெறும் உடல் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. அதில் ஆன்மீகத்தின் எந்தவொரு பெயரும் அடையாளமும் இல்லை. இந்த முயற்சிகள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்த முடியாது. அவ்வாறே அவற்றால் உண்மையான இறைஞானத்தின் ஒளியை வழங்கவும் முடியாது.

எனவே, இப்போது இந்தக் காலகட்டம் முற்றிலும் காலியாக இருக்கின்றது. தூய்மையடைவதற்காக இருக்கின்ற நபியின் வழிமுறைகள் முற்றிலும் கைவிடப்பட்டு விட்டது. அவற்றை அவர்கள் மறந்து விட்டனர். அந்த நபித்துவத்தின் காலகட்டம் மீண்டும் வர வேண்டும் என்றும், இறையச்சமும் தூய்மையும் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் இப்போது அல்லாஹ் விரும்பியுள்ளான். அதனை அவன் இந்த ஜமாஅத்தின் மூலமாக (செய்ய) விரும்புகின்றான். எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சீர்திருத்தத்திற்கான வழிமுறைகளைக் கூறியுள்ளார்களோ அவ்வாறே உண்மையான சீர்திருத்தத்தின் பக்கம் நீங்கள் கவனம் செலுத்துவது உங்கள் மீது கடமையாகும்.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1904 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி ஆண்டு மாநாட்டின் சமயத்தில் ளுஹர் தொழுகைக்குப் பிறகு அக்ஸா பள்ளிவாயிலில் வைத்து ஆற்றிய சொற்பொழிவு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰنِ அதாவது எல்லா நன்மைகளும் திருக்குர்ஆனிலே இருக்கிறது**

**உண்மையான நம்பிக்கையாளர்கள் பெரிய பெரிய தியாயங்களைச் செய்த பிறகும் கூட இறைவன் எப்போது? எவ்வாறு திருப்தி கொள்வான் என்று அஞ்சுகின்றனர்**

**நோன்பை நமது நன்மைக்காகவே அல்லாஹ் நம்மீது கடமையாக்கியுள்ளான்**

**நோன்பினால் மனிதனின் உடல் நலத்தில் சிறப்பான தாக்கம் ஏற்படுகின்றது**

**நோன்பினால் மனிதனின் வாழ்க்கையில் ஒழுக்கமும் உருவாகின்றது**

**நோன்பின் நோக்கம் இதுவேயாகும். அதாவது மனிதன் உடலைப் பேணுகின்ற ஒரு ரொட்டியை விட்டு விட்டு ஆன்மாவிற்குப் புத்துணர்ச்சியூட்டக் காரணமாக அமைகின்ற இன்னொரு ரொட்டியைப் பெற வேண்டும்**

**நாம் ரமலான் வருவதாலும், நோன்பின் வாழ்த்துக்களைக் கூறுவதால் மட்டும் மகிழ்ச்சியடைந்து விடக்கூடாது. மாறாக, அல்லாஹ் ரமலான் நோன்பின் நோக்கமாகக் கூறியுள்ளவற்றை அடைவதற்கு நாம் முயற்சி செய்கின்றோமா? இல்லையா? என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்**

**நம்பிக்கையாளர் நிரந்தர மனப்பான்மையுடன் நன்மைகளைத் தேடுகின்றார். மேலும் அதனைத் தொடரச் செய்கின்றார்**

**துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில் ஏதேனும் குறை இருப்பின் பிறகு நம்மிடத்தில்தான் குறை இருக்கின்றது. இறைவனது கூற்று ஒருபோதும் தவறாகாது**

**அருளுக்குரிய ரமலான் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களின் ஒளியில் நோன்பு கடமையாக்கப்பட்டது, அதன் முக்கியத்துவம் மற்றும் நம்பிக்கையாளர்களின் கடமைகள், மேலும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் வழிமுறைகள் தொடர்பாக எழுச்சியூட்டக்கூடிய பேருரை**

**எதிரிகள் தீங்களிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் பாதுகாப்பாக இருப்பதற்கும், முஸ்லிம் சமுதாயத்தின் ஒற்றுமை மற்றும் முழு உலகமும் அழிவின் படுகுழியிலுருந்து தப்பிப்தற்கும் துஆ செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் வலியுறுத்தினார்கள்**

**பாகிஸ்தான் இஸ்லாமாபாதைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் அஸீஸ் அஹ்மது சாஹிப் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் மதிப்பிற்குரிய இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்களின் வஃபாத் தொடர்பான அறிவிப்பு மற்றும் ஹுஸூர் அவர்கள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இருவரது ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 10 மே 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ○ اَيَّامًا مَّعْدُوْدٰتٍ ؕ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ فِدْيَةٌ طَعَامُ مِسْكِيْنٍ ؕ فَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَهُوَ خَيْرٌ لَّهٗ ؕ وَاَنْ تَصُوْمُوْا خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ○ شَهْرُ رَمَضَانَ الَّذِيْۤ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ؕ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ؕ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۫ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ○ وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ○

நான் ஓதிய வசனங்கள் பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம். (2:184)

(எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமை ஆகும். ஒருவர் முழுமையாகக் கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில், அது அவருக்கு நன்றே. நீங்கள் அறிவுடையவர் என்றால், நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது. (2:185)

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். திருக்குர்ஆன் எல்லா மக்களுக்கு நேர்வழி காட்டக்கூடியதும், (நன்மை தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விட்டுப் போன நோன்பை) மற்ற நாள்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்குக் கடினத்தை(த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்). (2:186)

(தூதரே) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:187)

இந்த வசனங்களில் அல்லாஹ் நோன்பு கடமையாக்கப்பட்டது

குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும், மேலும் இந்த மாதத்தில் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவது தொடர்பான வழிமுறைகளை எடுத்துக் கூறியுள்ளான். எத்தகையதொரு மாதத்தை உங்களுக்காக நிர்ணயித்துள்ளான் என்றால் இந்த மாதத்தில் இறைவன் தனது அடியார்களுக்கு அருகில் வந்து விடுகின்றான். மேலும் ஷய்த்தானை கட்டிப் போட்டு விடுகின்றான். எனவே அடியார்கள் மீது இந்த அளவுக்கு அல்லாஹ்வின் கருணையின் வாசல்கள் திறக்கப்பட்டுள்ளபோது, நாம் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் கூற்றுகளைச் செவியேற்று நோன்பின் உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: ரமலானிற்கு என்ன என்ன அருள்கள் இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமென்றால், மேலும் அல்லாஹ் உங்கள் மீது எந்த அளவுக்குக் கருணை காட்டக் கூடியவனாக இருக்கின்றான் என்பது தெரிந்திருக்குமென்றால் பிறகு நீங்கள் முழு வருடமும் ரமலானின் மாதமாகவே இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள்.

ஆக, நமது நன்மைக்காகவே அல்லாஹ் நம்மீது நோன்பை கடமையாக்கியுள்ளான். அனைத்து வித ஆன்மீக மற்றும் பௌதீக பயன்களை நாம் நோன்பிலிருந்து பெற முடியும். நோன்பினால் மனிதனின் உடம்பில் மிகச் சிறந்த தாக்கம் ஏற்படுகின்றது என்று முஸ்லிமல்லாத மருத்துவர்களும் இப்போது இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்கின்றனர். ஆரம்பத்தில் இதனை ஏற்றுக் கொண்டவர்கள் ஒரு சிலர் தான்; ஆனால் இப்போது இவ்வாறு கூறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மேலும் சில முஸ்லிம் அல்லாத மருத்துவர்கள், நோன்பினால் மனிதனின் வாழ்க்கையில் ஒழுக்கமும் உருவாகின்றது என்று எழுதத் தொடங்கியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் உலகவாதிகள் கூறினாலும், கூறாவிட்டாலும் ஒரு உண்மையான நம்பிக்கையாளருக்கு இது பற்றிய அனுபவம் இருக்கும். நோன்பு எவ்வாறு பௌதீக உடல்நிலையைச் சரி செய்யக் கூடியதாக இருக்கின்றதோ அதை விட அதிகமாக ஆன்மீகமான முறையிலும் ஆன்மீக நிலைமையைச் சரி செய்யக் கூடியதாக இருப்பதற்குக் காரணமாக அமைகின்றது. எனவே நாம் அல்லாஹ்வின் இந்த கட்டளையைச் செயல்படுத்தியவாறு ரமலான் மாதத்தில் நமது ஆன்மீக நிலைமையில் முன்னேற்றம் அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் இந்த வசனங்களில் கூறிய விஷயங்கள் இதுவாகும். அதாவது ஒரு உண்மையான நம்பிக்கையாளர் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. இந்த நோன்பானது காலை முதல் மாலை வரை பட்டினியாக இருப்பது மட்டும் கிடையாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்: நோன்பினால் இறைவனது விருப்பம் என்னவென்றால், ஒரு உணவைக் குறைத்து விட்டு இன்னொரு உணவை அதிகப்படுத்த வேண்டும் என்பதாகும். பட்டினியாக இருப்பது மட்டும் போதுமானது கிடையாது என்பதை நோன்பாளி எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். மாறாக, அவர் இறைவனைத் துதிப்பதில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் மனிதன் இறைவனோடுள்ள தொடர்பிலும், அவனது இறை வணக்கத்திலும், அவனைத் துதிப்பதிலும் முன்னேற வேண்டும். மேலும் உலகத்தின் பக்கம் குறைவான கவனம் ஏற்பட வேண்டும். உலகப் பணிகள் நம்முடன் இணைந்தே இருக்கின்றது. உலகப் பணிகள் நிற்பதில்லை. ஆனால் உலகப் பணிகளைச் செய்தாலும் இறைவனது ஞாபகம் இருக்க வேண்டும். அவனது கட்டளைகள் மீது பார்வை இருக்க வேண்டும். அவனைத் துதித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நோன்பின் நோக்கம் இதுவேயாகும். அதாவது மனிதன் உடலைப் பேணுகின்ற ஒரு ரொட்டியை விட்டு விட்டு ஆன்மாவிற்குப் புத்துணர்ச்சியூட்டக் காரணமாக அமைகின்ற இன்னொரு ரொட்டியைப் பெற வேண்டும். எவர்கள் இறைவனுக்காக நோன்பு நோற்பார்களோ மேலும் சடங்கு ரீதியாக நோன்பு வைப்பதில்லையோ அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்வதிலும், அவனது தூய்மையை எடுத்துரைப்பதிலும் மேலும் அவனைத் துதிப்பதிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 123)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பட்டினியாக இருப்பதனால் அல்லாஹ்விற்கு எந்த பயனும் கிடையாது.

(சஹீஹுல் புகாரி , கிதாபுஸ் சவ்ம்... ஹதீஸ் எண் 1903)

உங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது என்று அல்லாஹ் கூறிவிட்டு அதைத் தொடர்ந்து, நீங்கள் இறையச்சத்தைப் பேணி நடக்க வேண்டும் என்று கூறுகின்றான். இறையச்சம் என்றால் என்ன? அதாவது நீங்கள் ஆன்மீக மற்றும் பௌதீக பலவீனத்திலிருந்துத் தப்பித்துக் கொள்ளுங்கள். மேலும் நல்லொழுக்கத்தைப் பேண வேண்டும் என்பதாகும்.

நான் முன்பு கூறியது போன்று அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பட்டினியாக இருப்பதனால் அல்லாஹ்விற்கு எந்தப் பயனும் கிடையாது.

உங்களது அனைத்து ஆன்மீகப் பலவீனங்களையும், நல்லொழுக்கப் பலவீனங்களையும் விட்டு உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள். எப்போது வரை நோன்பு உங்களிடத்தில் இறையச்சத்தின் இந்தத் தரத்தை உருவாக்கவில்லையோ அதுவரை உங்களது நோன்பினால் எந்தப் பயனும் கிடையாது.

இறையச்சத்தின் தரம் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்:

இறையச்சமுடையவர் ஆகுவதற்கு இது அவசியமாகும். அதாவது, மிகப்பெரிய தீமைகளான விபச்சாரம், திருட்டு, மக்களின் உரிமைகளைச் செலுத்தாமல் இருப்பது, வெளிப்படுத்திக் காட்டுவது, செயற்கைத் தனத்தை வெளிப்படுத்துவது, ஆணவம், மற்றவர்களை ஏளனமாக கருதுவது, கருமித்தனம் ஆகிய தீமைகளை விட்டு விட்டு நல்ல பண்புகளை மேற்கொள்வதில் முன்னேற்றம் அடைய வேண்டும். சிறந்த நல்லொழுக்கங்களைப் பேண வேண்டும். மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மேலும் தமது நல்லொழுக்கத்தைச் சிறந்தாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனிடம் உண்மையான நன்றியுணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

இதுவும் இறையச்சத்திற்கு அவசியமாகும். ஆன்மீகத்திற்கு அவசியமாகும். அல்லாஹ்வுடன் உண்மையான விசுவாசமும் உண்மையான தொடர்பும் இருக்க வேண்டும். தொண்டு செய்வதற்கான இடத்தை தேட வேண்டும். இதில் அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளும் வந்து விட்டன. மேலும் மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டுகளும் வந்து விட்டது. அதாவது எத்தகைய தன்னலமற்ற தொண்டாற்ற வேண்டும் என்றால் மக்கள் அவரைக் குறித்து இவர் உண்மையிலேயே இறைவனுக்காகவே தொண்டு செய்கின்றார் என்று கூற வேண்டும். அந்த தொண்டில் தமது எந்தவொரு நோக்கமும் இருக்கக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த விஷயங்களைப் பேணுவதனால் மனிதன் இறையச்சமுடையவர் என்று

அழைக்கப்படுகின்றார். எவர்களிடம் இந்த விஷயங்களும் இருக்கின்றதோ அவரே உண்மையில் இறையச்சமுடையவர் ஆவார். அதாவது இந்த நல்லொழுக்கங்கள் ஒவ்வொருவரிடம் தனித்தனியாக இருக்குமென்றால், மேலும் ஒட்டுமொத்தமாக இந்த எல்லா நல்ல பண்புகளும் ஒருவரிடம் இருக்கவில்லை என்றால் பிறகு அவர் இறையச்சமுடையவர் என்று அழைக்கப்பட மாட்டார்.

மேலும் அத்தகைய நபரைக் குறித்தே لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ என்று வந்துள்ளது. அதாவது, அவர்களுக்கு எந்த அச்சமும் இருப்பதில்லை. மேலும் அவர்கள் வருத்தமடையவும் மாட்டார்கள். (2:63) அல்லாஹ் இதற்கான உத்திரவாதத்தை அவர்களுக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் இந்த உத்திரவாதம் அவர்களுக்குக் கிடைத்த பின் வேறு என்ன அவர்களுக்கு வேண்டும்? இறைவன் அத்தகையவர்களது நண்பனாக ஆகி விடுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: (7:197) وَهُوَ يَتَوَلَّى الصَّالِحِينَ

நபிமொழியில் வந்துள்ளது: அல்லாஹ் அவர்கள் பிடிக்கின்ற கையாகவும், அவர்கள் பார்க்கின்ற கண்ணாகவும், அவர்கள் கேட்கின்ற காதாகவும், அவர்கள் நடக்கின்ற காலாகவும் ஆகி விடுகின்றான்.

இன்னொரு நபிமொழியில் வந்துள்ளது: அல்லாஹ் கூறுகின்றான்: எவர் எனது நேசரின் எதிரியாக ஆகி விடுவாரோ அவரிடம், என்னுடன் சண்டையிடுவதற்கு ஆயத்தமாகுங்கள் என்று நான் கூறுகின்றேன்.

ஓரிடத்தில் கூறுகின்றான்: எவர் இறைவனது நேசத்திற்குரியவரின் மீது தாக்குதல் தொடுக்கின்றாரோ இறைவன் அவர் மீது சிங்கத்தின் குட்டியை எவராவது பிடுங்கினால் எவ்வாறு அது கோபத்தினால் தாக்குதல் தொடுக்குமோ அவ்வாறு நான் அவன் தாக்குதல் தொடுக்கின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 400,401)

எனவே நோன்பின் உரிமைச் செலுத்தியவாறு நம்முடைய இறையச்சத்தின் தரம் இவ்வாறு இருக்குமென்றால் அப்போது தான் அந்த நோன்பும் ஒரு நம்பிக்கையாளரை, ஒரு முஸ்லிமை இறைவனது கேடயத்திற்குப் பின்னால் கொண்டு வரும்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: நோன்பைத் தவிர மனிதனது அனைத்து செயல்களும் அவனுக்காகவே இருக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்: மனிதன் நோன்பை எனக்காக வைக்கின்றான். உண்மையான நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விற்காகவே நோன்பு நோற்கின்றனர்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: எவர் எனக்காக நோன்பு நோற்பாரோ நானே அவருக்குக் கூலியாக இருக்கின்றேன். அவருக்கு நானே என் தரப்பிலிருந்து கூலி வழங்குபவனாக இருக்கின்றேன்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பு கேடயமாகும். உங்களில் எவர் நோன்பு நோற்றிருப்பாரோ அவர் எந்தவொரு தீய பேச்சும் பேசக்கூடாது; ஏசிப் பேசவும் கூடாது. மேலும் எவராவது ஒருவர் அவரை ஏசிப் பேசினால் அல்லது அவரிடம் சண்டையிட்டால் நான் நோன்பாளி என்று பதில் கூற வேண்டும். அதாவது நான் எந்தவொரு தீய விஷயத்திலும் விழ மாட்டேன்.

இதனைக் கூறிவிட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவனது கையில் முஹம்மது (ஸல்) அவர்களின் உயிர் இருக்கிறதோ அந்த இருப்பின் மீது ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வரக்கூடிய துர்நாற்றம் அல்லாஹ்விடம் கஸ்தூரியை விட மிகச் சிறந்ததாகும். அதாவது கஸ்தூரி வாசனையை விட அதிக வாசனையை உடையதாக இருக்கும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பாளிக்கு மகிழ்ச்சி தரக்கூடிய இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. அது அவர்களை மகிழ்ச்சிப்படுத்துகின்றது. ஒன்று, அவர் இஃப்தார் செய்யும்போது நோன்பு திறக்கும்போது மகிழ்ச்சியடைகின்றார். அதாவது அல்லாஹ் அவருக்கு நோன்பு திறப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். இரண்டாவதாக, அவர் தமது இறைவனை சந்திக்கும்போது நோன்பு வைத்த காரணத்தினால் மகிழ்ச்சியடைவார். ஏனென்றால், நானே அவருக்குக் கூலி வழங்குபவனாக இருக்கின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே எவர் அல்லாஹ்விற்காக நோன்பு நோற்பாரோ அவருக்கு அவன் கூலி வழங்கும்போது அங்கு அவரது மகிழ்ச்சிக்கு ஒரு அளவே இல்லாமல் இருக்கும்.

(சஹீஹுல் புகாரி , கிதாபுஸ் சவ்ம்... ஹதீஸ் எண் 1904)

எனவே ஒரு நோன்பாளி இந்த இறையச்சத்தின் தரத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும் ஒரு உண்மையான நம்பிக்கையாளர் இதனை அடையவே செய்கின்றார். எனவே இந்த இறையச்சத்தின் தரத்தை நோன்பாளி பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஒரு உண்மையான நோன்பாளி அதனைப் பெறவும் செய்கின்றார். அதாவது அவர் நோன்பை உலகத்தின் அனைத்துக் கலப்படத்திருந்தும் விலக்கி தூய்மையானதாக வைக்க வேண்டும்.

மேலும் நோன்பாளி எல்லா வித ஆன்மீக மற்றும் நல்லொழுக்க பலவீனத்திலிருந்து தப்பித்தவாறு நோன்பு நோற்க வேண்டும். நான் நோன்பு வைத்துள்ளேன் என்பதால் மட்டும் அவர் மகிழ்ச்சியடைந்து விடக் கூடாது. உலகத்தில் எத்தனையோ நபர்கள் வெளிப்படையாக நோன்பு நோற்கின்றனர். ஆனால் அவர்களிடம் தொழுகையின் தரம் இருக்க வேண்டிய அளவிற்கு இருப்பதில்லை. மேலும் அவர்களின் நல்லொழுக்க நிலையும் எந்தத் தரத்தில் இருக்க வேண்டுமோ அவ்வாறு இருப்பதில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஷய்த்தான் இந்த மாதத்தில் பிணைக்கப்பட்டு விடுவான். அவன் கட்டப்பட்டு விடுவான் என்று கூறியுள்ளார்கள். அவ்வாறிருக்கும்போது உலகத்தில் இந்த ரமலான் மாதத்திலும் ஏன் தீமைகள் எஞ்சியிருக்கின்றன?

எவர்கள் நோன்பின் உண்மைத் தன்மையை புரிந்தவாறு இறையச்சத்தைப் பேணுகின்றார்களோ அவர்களுக்கே நோன்பானது கேடயமாக இருக்கின்றது. மேலும் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து அவர்களே காப்பாற்றப்படுகின்றார்கள். எனவே இந்த உண்மையான நோக்கத்தை நாம் எப்போதும் நம் கண்முன் நிறுத்த வேண்டும். இல்லையென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் இதனையும் கூறியுள்ளார்கள்: அதாவது எவ்வித சந்தேகமுமின்றி ரமலானில் சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. மேலும் நரகத்தின் வாசல்களுக்கு பூட்டுப் போடப்படுகின்றது. மேலும் ஷய்த்தான் சங்கிலிகளால் கட்டப்படுகின்றான்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் சவ்ம்... ஹதீஸ் எண் 1079)

ஆனால் அத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறும் எச்சரித்துள்ளார்கள். மேலும் இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்டியுள்ளார்கள்: இவ்வாறிருந்தும் கூட எவர் ஒருவர் ரமலான் மாதத்தைப் பெற்றும் மன்னிக்கப்படவில்லை என்றால் பிறகு அவர் எப்போது மன்னிக்கப்படுவார்?

(சுனன் திர்மிதி, அப்வாவுத் தஃவாத்.... ஹதீஸ் எண் 3545)

ஆக இந்த விஷயத்தை அன்னார் நம்மிடம் கூறுகின்றார்கள். முஸ்லிம்கள் என்று தம்மைக் கூறுகின்றவர்களிடம் அன்னார் கூறுகின்றார்கள். உங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது

என்று அல்லாஹ் யாரைப் பார்த்துக் கூறியுள்ளானோ அவர்களைப் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்கள் இதனை கூறுகின்றார்கள். ஏனென்றால் நீங்கள் இந்த மாதத்தில் முழுக்க முழுக்க இறைவணக்கத்திலும் மேலும் நல்லொழுக்க நிலைகளிலும் முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால் நீங்கள் அவ்வாறு செய்யமாட்டீர்கள் என்றால் பிறகு ரமலான் வருவதும், ஷய்த்தான் கட்டப்படுவதும், சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுவதும், நரகத்தின் கதவுகள் அடைக்கப்படுவதும் எந்தப் பயனையும் தராது.

இதைக் குறித்தும் அன்னார் எச்சரிக்கை செய்து விட்டார்கள்: அதாவது அல்லாஹ்வின் பரந்த கருணைக்குப் பிறகும் கூட மன்னிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றால் பிறகு எப்போது தான் செய்யப்படும்? எனவே நாம் ரமலான் மாதம் வந்ததாலும், நோன்பிற்கான வாழ்த்துக்களை கூறுவதால் மட்டும் மகிழ்ச்சியடைந்து விடக்கூடாது. மாறாக, நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். அதாவது அல்லாஹ் ரமலானின் நோக்கமாகக் கூறியுள்ளவற்றை அடைவதற்கு நாம் முயற்சி செய்கின்றோமா? அல்லது இல்லையா? அல்லாஹ் நம் அனைவருக்கும் இதனை அடைவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் தனது கருணை மற்றும் மன்னிப்பின் போர்வையினால் நம்மையும் போர்த்துவானாக.

பிறகு அடுத்த வசனத்தில், எந்த நிலையில் நீங்கள் நோன்பிலிருந்து விலக்கை பெறுகின்றீர்கள் என்பதையும் அல்லாஹ் கூறுகின்றான். ஆனால் இதைக் கூறுவதற்கு முன்பாக இதனையும் அல்லாஹ் தெளிவுபடுத்தி விட்டான். அதாவது நோன்பிற்கு நானே கூலியாவேன். மேலும் நான் நம்பிக்கையாளர்களுக்குக் குறிப்பாக மன்னிப்பிற்கான ஏற்பாட்டைச் செய்கின்றேன். எனவே நாம் நோன்பு வைத்து விட்டு மிகப்பெரிய தியாகத்தைச் செய்து விட்டோம். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் கருணை மற்றும்ம பரிவு மற்றும் மன்னிப்பு ஆகியவற்றின் போர்வை நம்மீது விரிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் வரக்கூடாது என்பதற்காகவே அல்லாஹ் முன்பாகவே இதனைக் கூறி விட்டான்.

எவ்வித சந்தேகமுமின்றி அல்லாஹ்வின் கருணை மற்றும் பரிவனாது பரந்து விரிந்துள்ளது. ஆனால் இதுவொன்றும் மிகப்பெரிய தியாகம் அல்ல. சஹரி நேரத்திலும் நாம் வயிறு நிறைய உணவு உண்கின்றோம். இஃப்தாரி நேரத்திலும் தமது விருப்பத்திற்கேற்ப ஒவ்வொருவரும் சாப்பிடுகின்றார். பிறகு எந்த நிலையான தியாகத்தை செய்து விட்டீர்கள்? இது வருடத்தில் சில குறிப்பிட்ட நாட்கள் தானே!

சில மக்கள் நோன்பு நோற்றவாறு நாங்கள் நோன்பு நோற்றுள்ளோம் என்று பெருமையுடன் கூறுகின்றனர். இது வெளிப்படுத்தக்கூடிய வகையில் ஒன்றும் செய்த மிகப்பெரிய தியாகம் அல்ல. மாறாக, உண்மையான நம்பிக்கையாளர் மிகப்பெரிய தியாகங்களைச் செய்த பிறகும் கூட இறைவன் எப்போது, எவ்வாறு திருப்தியடைவான் என்று அஞ்சுகின்றார். எவ்வாறிருப்பினும், அல்லாஹ் கூறுகின்றான்: இது கணக்கிடப்பட்ட சில நாட்கள் மட்டுமே ஆகும். வருடத்தின் நாட்களில் 12 ல் ஒரு பகுதி தான்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: இந்த விஷயம் ஒன்றும் மிகப்பெரிய தியாகம் அல்ல.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: இந்தக் குறிப்பிட்ட நாட்களிலும் கூட அல்லாஹ் உங்களைத் தனது கருணையைக் கொண்டு அருள் புரிகின்றான். ஆனால் இந்த நாட்களில் நீங்கள் நோய்வாய்ப்பட்டால், அல்லது பயணம் மேற்கொள்ள வேண்டியது வந்தால் நோன்பிலிருந்து இந்த நாட்களில் உங்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் விடுபட்ட நோன்பின் எண்ணிக்கையை வருடத்திற்குள் ஏதாவதொரு நேரத்தில் முழுமை செய்ய வேண்டும். மேலும் நிரந்தர நோயாளிகளாக இருக்கின்றவர்கள்; எவ்வித சாக்குப்போக்கும் கூறாதவர்கள் மாறாக, நோன்பு வைக்கக் கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருந்தால் பிறகு அவருக்கு ஆற்றல் இருக்குமென்றால் ஒரு ஏழைக்கு நோன்பு வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அதற்கான ஆற்றல் இருக்குமென்றால் இதனைச் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். ஆனால் பொருளாதார ரீதியாக ஒருவர் பலவீனமானவராக இருப்பார் என்றால், மேலும் அவரே சதகாவைப் பெற்றும், உதவிகளைப் பெற்றும் வாழ்க்கையை கழிக்கின்றார் என்றால் பிறகு அவர் எந்த உணவை உண்கின்றாரோ அதே உணவைக் கொண்டு ஒரு ஏழைக்கு நோன்பு வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது கட்டாயமாகும். ஆனால் இதை விட அதிக ஆற்றல் இருக்குமென்றால் பிறகு அவர் ஃபித்யாவும் கொடுக்க வேண்டும். பிறகு நோன்பும் நோற்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாகக் கூறுகின்றார்கள்: இறைவன் ஒவ்வொரு நபருக்கும் அவரது சக்திக்கு அப்பாற்பட்ட துன்பத்தைத் தருவதில்லை. அதாவது எவ்வளவு ஆற்றல் இருக்குமோ, மேலும் நீங்கள் எதை உண்ணுகின்றீர்களோ, பருகுகின்றீர்களோ அதற்கேற்ப ஃபித்யா வழங்கப்பட வேண்டும். மேலும் இனி நான் அனைத்து நோன்புகளையும் கண்டிப்பாக நோற்பேன் என்று உறுதி கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 350)

அன்னார் கூறினார்கள்: ஒரு முறை எனது உள்ளத்தில் ஃபித்யா ஏன் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற எண்ணம் தோன்றியது. நான் சிந்தித்துப் பார்த்தேன். பிறகு எனக்கு திறந்து காண்பிக்கப்பட்டது. அதாவது நற்பாக்கியம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அவருக்கு நோன்பு நோற்பதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: இறைவன் ஆற்றல்மிக்கவன் ஆவான். அவன் விரும்பினால் காசநோய் கொண்ட ஒருவருக்குக் கூட நோன்பு நோற்பதற்கான ஆற்றலை வழங்க முடியும். காசநோய் கொண்டவருக்குக் கூட அல்லாஹ் ஆற்றலை வழங்க முடியும். அவருடைய ஆரோக்கியத்தைச் சிறந்ததாக ஆக்க முடியும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஃபித்யா கொடுக்கப்படுவதன் நோக்கம் என்னவென்றால், அவர் ஆற்றலைப் பெற வேண்டும் என்பதே ஆகும். மேலும் இது இறைவனது அருளாலேயே கிடைக்கின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: எனது பார்வையில் இவ்வாறு செய்வது சிறந்ததாகும். அதாவது மனிதன் துஆ செய்ய வேண்டும். இறைவா! இது உனது ஒரு விருப்பத்திற்குரிய மாதமாகும். மேலும் நான் இதிலிருந்து இழப்பிற்குரியவனாக இருந்து விடுவேன். மேலும் இனி வரக்கூடிய வருடம் நான் உயிருடன் இருப்பேனா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. மேலும் விடுபட்ட நோன்பை நோற்பேனா? மாட்டேனா? மேலும் மீண்டும் ஆரோக்கியம் இதற்கான அனுமதியைத் தருமா? தராதா? என்பதும் எனக்குத் தெரியாது. இவ்வாறு துஆ செய்து அவனிடம் இதற்காக நற்பாக்கியத்தை வேண்ட வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: மனிதன் இந்த விஷயங்களைக் கூறி அல்லாஹ்விடம் நற்பாக்கியத்தை வேண்ட வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 258)

ஆக ஃபித்யா தற்காலிக நோயாளிகளும் வழங்கலாம். மேலும் பயணம் முடிவுற்ற பிறகு மேலும் ஆரோக்கியம் கிடைத்த பிறகு நோன்பு நோற்பது அவசியமாகும். இவ்விரு விஷயங்களும் இதிலிருந்து நிரூபணமாகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: எவர் ஆரோக்கியத்தைப் பெற்று நோன்பு நோற்பதற்கான தகுதியை பெற்று விடுகின்றாரோ அத்தகைய நபர் ஃபித்யா செலுத்தலாம் என்று எண்ணுவது மார்க்கத்தில் ஒன்றை புதிதாக புகுத்துவதாகும். எவர் ஒருவர் ஆரோக்கியத்தைப் பெற்ற பிறகு அல்லது ரமலானில் நோயுற்றிருந்தார் பிறகு ஆரோக்கியத்தைப் பெற்று விட்டு நான் ரமலானின் நோன்பு நோற்கவில்லை. ஃபித்யா கொடுத்து விட்டேன் என்று கூறுவது மார்க்கத்தில் ஒன்றைப் புதிதாக புகுத்துவதாகும்.

தேவையில்லாமல் அனுமதியின் வழியை திறப்பதாகும். தவறான தீய சடங்குகளை உருவாக்குவதாகும். ரமலானில் ஃபித்யா கொடுத்திருந்தாலும் பிறகு ரமலானிற்குப் பிறகு நோன்பு நோற்பது கட்டாயமாகும். வருடத்தில் எந்தவொரு நேரத்திலும் வைக்கலாம்.

அன்னார் கூறுகின்றார்கள்: நிரந்தர நோயாளி மற்றும் பால் கொடுக்கின்ற பெண்கள், கர்ப்பிணி பெண்கள் ஆகியோர் இந்த நிலையிலேயே வருடம் கழிந்து விட்டால் பிறகு அவர்களுக்கு ஃபித்யா கொடுப்பதே போதுமானதாகும். ஆனால் ஃபித்யாவுடன் இந்த மாதத்தின் இறைவணக்கங்கள் மற்றும் இறை தியானம் மற்றும் இதர நன்மைகளை தொடரச் செய்வது அவசியமாகும். அதுவன்றி ஃபித்யா கொடுத்து விட்டோம். இனி நாம் எல்லாவற்றிலிருந்தும் விதிவிலக்கை பெற்று விட்டோம் என்பது கிடையாது.

அவர்கள் நோன்பு வைக்காமல் இருந்தாலும், ஃபித்யா கொடுத்து மற்ற நன்மைகளைத் தொடரச் செய்தால் பிறகு அவர்கள் ரமலானின் அருட்களைப் பெறக் கூடியவர்களாக இருப்பார்கள். வெறும் ஃபித்யா கொடுத்து விட்டுத் தொழுகைகளையும் மற்ற நன்மைகளையும் மறந்து விட்டால் பிறகு இது உண்மையான நம்பிக்கையாளராக ஆக்காது. ரமலானின் அருட்களுக்கு பங்குதாரராக ஆக்காது. (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 433)

பிறகு அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான்: எந்த நன்மைகளை உங்கள் உள்ளம் விரும்பாத போதிலும், இது அல்லாஹ்வின் கட்டளையாகும் என்று நீங்கள் முழுமையான கட்டுப்படுதலுடன் செய்கின்றீர்களோ பிறகு அல்லாஹ் அதற்குரிய சிறந்த விளைவுகளை ஏற்படுத்துவான்.

சிலரது பார்வையில் فَمَنْ تَطَوَّعَ خَيْرًا என்பதன் பொருள், எந்தப் பணியை நீங்கள் உபரியாக செய்வீர்களோ அதுவும் கூட உங்களுக்கு சிறந்தாகும் என்பதாகும். இரண்டு பொருளும் இதற்கு இருக்கின்றது. அதாவது உபரியாக அதிகப்படியான ஃபித்யாவை வழங்கலாம். நான் இன்று ஏதாவதொரு காரணத்தினால் நோன்பு நோற்க முடியவில்லை. நாளை நோற்பேன் என்று கருதி ஒரு நபருக்குப் பதிலாக இரண்டு ஏழைகளுக்கு உணவளித்தால் ஃபித்யா கொடுத்தால் அது அதிகப்படியான நன்மையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இது உங்களுக்குச் சிறந்ததாகும். ஏனென்றால் அல்லாஹ் உங்களது நன்மைகளை அது உங்கள் மீது சுமையைச் சுமத்தியவாறு செய்தாலும் அல்லது மகிழ்ச்சியாக உபரியான நன்மைகளைச் செய்தாலும் அல்லாஹ் அதற்கான கூலியை வழங்குகின்றான்.

இந்த வசனத்தின் இறுதியில் மீண்டும் அல்லாஹ் இதனைக் கூறுகின்றான்: அதாவது நீங்கள் நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்ததாகும்.

பிறகு அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: இந்த மாதத்தில் நாம் திருக்குர்ஆனை அருளினோம். அது உங்கள் நேர்வழிக்குக் காரணியாகவும், நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதும், (நன்மை, தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். ஆக, திருக்குர்ஆனுக்கு ரமலான் மாதத்தோடு ஒரு தொடர்பு இருக்கிறது. இந்த மாதத்தில் நோன்பு நோற்பதுடன் இதனைப் படிப்பது மற்றும் இதனைப் பற்றிச் சிந்திப்பது, மற்றும் இதன் கட்டளைகளைத் தேடுவதற்கும், அதன்படி செயல்படுவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்பட்டு நாம் ரமலானின் நோன்பின் உண்மையான அருளைப் பெறக் கூடியவர்களாக திகழ வேண்டும். ஒவ்வொரு நபரும் திருக்குர்ஆனின் ஆழமான பொருளை சுயமே சென்றடைய முடியாது. எனவே திருக்குர்ஆனை ஓதுவது மற்றும் அதன் மொழியாக்கத்தில் எதனை அவரால் படிக்க முடியுமோ படிப்பது, மேலும் ஜமாஅத்துகளில் பள்ளிவாசல்களில் எங்கெல்லாம் தர்ஸிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோ அதிலிருந்து பயன் பெற வேண்டும்.

அவ்வாறே M.T.A விலும் தொடர்ச்சியாக தர்ஸிற்கான ஏற்பாடு உள்ளது. அதிலிருந்தும் பயன் பெற வேண்டும். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தர்ஸ் வருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றும் இதுவேயாகும். அதாவது இந்த மாதத்தில் திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள்.

திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் கவனம் ஓர் அஹ்மதிக்கு சாதாரண நாட்களிலும் மிக அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் குறிப்பாக ரமலான் மாதத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியமாகும். அவ்வாறல்லாமல் நோன்பு நோற்பதனால் மட்டும் எவ்விதப் பயனும் கிடையாது. குறிப்பாக அல்லாஹ் இந்த மாதத்தில் திருக்குர்ஆனை அருளியதாக கூறுகின்றான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களும் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

நாம் நற்பேறு பெற்றவர்களாகவோம். அல்லாஹ் நமக்கு இந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். அன்னார் திருக்குர்ஆனின் ஞானமிக்க விளக்கங்கள் மற்றும் பொருள்களின் புதிய புதிய அம்சங்களை எடுத்துக் கூறியுள்ளதுடன் அதன்படி நடப்பது மற்றும் திருக்குர்ஆனுக்கு கண்ணியமளிப்பது மேலும் அதனைப் படித்து அதனைச் சிந்திப்பதன் பக்கமும் குறிப்பாக நமக்குக் கவனமூட்டியுள்ளார்கள்.

மேலும் கூறினார்கள்: நீங்கள் குறிப்பான கவனத்துடன் இதனைப் படித்து இதன்படி நடக்க வேண்டும். மேலும் தமது நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வெளிப்படையான ஞானம் மற்றும் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெறுவது ஆகியவற்றிற்கிடையே ஒரு மகத்துவமிக்க வேறுபாடு உள்ளது. அதாவது உலக அறிவு மற்றும் திருக்குர்ஆனின் அறிவு ஆகியவற்றிற்கிடையே ஒரு மிகப்பெரிய வேறுபாடு உள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: உலக அறிவை பெற்றுக் கொள்வதற்கு இறையச்சத்தை மேற்கொள்வது நிபந்தனை கிடையாது. மேலும் இலக்கணம், தத்துவம், அஸ்ட்ரானமி, மருத்தவம் போன்றவற்றைப் படிப்பதற்கும் இறையச்சத்தை மேற்கொள்வது அவசியம் கிடையாது. அல்லது இதனைக் கற்கத் தொழுகையை முறையாகப் பேண வேண்டும் என்பதும் அவசியம் கிடையாது.ஆக இது மிக முக்கிய விஷயமாகும். திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கு நோன்பைப் பேணுவது அவசியமாகும். இறைவணக்கத்தை மேற்கொள்வது அவசியமாகும். தொழுகையை மேற்கொள்வது அவசியமாகும். இறையச்சத்தில் முன்னேறுவது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எதனை அல்லாஹ் செய்யும்படி கட்டளையிட்டுள்ளானோ, மேலும் எதனை செய்யக் கூடாது என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானோ அதனை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். இது திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெறுவதற்கு மிக முக்கியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: உலக ஞானத்தைப் பெறுவதற்கு உங்களது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் ஒன்றாக ஆக்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் திருக்குர்ஆனைக் கற்பதற்கு, அதன் ஞானத்தைப் பெறுவதற்கு அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் மனிதன் கண்முன் நிறுத்தி செயல்படுவது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: உங்களது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ் வைக்க வேண்டும். மாறாக, உலகக் கல்வியைப் பெற்றவர்கள் ஒவ்வொரு குழப்பத்திலும் மூழ்கியுள்ளனர். இன்று உலகத்திற்கு முன்பாக மிகச்சிறந்த ஒரு அனுபவமும் இருக்கிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: இன்று உலகத்திற்கு முன்பாக மிகச்சிறந்த ஓர் அனுபவமும் இருக்கிறது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைச் சார்ந்தவர்கள் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். மேலும் அனுதினமும் புதிய புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்கின்றனர். ஆனால் அவர்களது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைமை மிகவும் வெட்கத்திற்குரியதாக இருக்கிறது.

இன்றும் நாம் பார்க்கின்றோம். அன்றைய காலகட்டத்தை விட அதிகமாக இன்று சுதந்திரம் என்ற பெயரில் நல்லொழுக்க நிலைகளில் இவர்கள் வீழ்ந்து கொண்டே செல்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: லண்டனின் பூங்காவிலும், பாரிஸின் ஹோட்டலிலுமுள்ள நிலைமைகள் தொடர்பாக எவையெல்லாம் அச்சிடப்பட்டுள்ளதோ அதைப் பற்றி எடுத்துக் கூறவே முடியாது. ஆனால் விண்ணின் ஞானம் மற்றும் திருக்குர்ஆனைத் தெரிந்து கொள்வதற்கு முதல் நிபந்தனை இறையச்சமாகும். தவ்பா செய்வது அவசியம் உள்ளது. அது எத்தகைய தவ்பா என்றால் உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும். எப்போது வரை மனிதன் முழுமையான பணிவு, தன்னடக்கத்துடன் அல்லாஹ்வின் கட்டளைகளைப் படித்து அதன்படி செயல்படவில்லையோ மேலும் அவனது கம்பீரத்தைக் கண்டு அஞ்சியவாறு பணிவுடன் அவன் முன்னால் குனியவில்லையோ அப்போது வரை திருக்குர்ஆன் ஞானங்களின் கதவுகள் திறக்காது. மேலும் ஆன்மாவை பரிபாலிப்பதற்கான ஏற்பாடுகளும் அவருக்கு திருக்குர்ஆனிலிருந்து கிடைக்க முடியாது. அதனைப் பெறுவதனால் ஆன்மாவில் ஒரு இன்பமும், நிம்மதியும் ஏற்படுகின்றது. எனவே திருக்குர்ஆனின் ஞானத்தைப் புரிந்து கொள்வதற்கு இறையச்சத்தை மேற்கொள்வது மிக அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் இறைவனது வேதமாகும். அதன் ஞானங்கள் இறைவனது கையில் இருக்கின்றது. ஆக இதற்கு இறையச்சமானது ஏணிப்படியாகும். தக்வா என்ற அந்த ஏணிப்படியைப் பயன்படுத்துவீர்கள் என்றால் திருக்குர்ஆனின் ஞானம் உங்களுக்குக் கிடைக்கும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஈமானில்லாத தீய இயல்பைக் கொண்ட அசுத்தமான ஆன்மாவுடைய, உலக இன்பத்தில் மூழ்கியிருந்து செவிடராக இருப்பாரேயானால் பிறகு ஒரு முஸ்லிம் தம்மை முஸ்லிம் என்று கூறி அவர் வெறும் இலக்கணம் போன்ற ஞானங்களைப் பெற்றிருப்பதில் எவ்வளவு பெரிய அறிஞராக இருந்தாலும் உலகத்தின் பக்கமே அவரது பார்வை செலுத்தி அமர்ந்திருப்பாரேயானால் பிறகு இந்த அனைத்து ஞானங்கள் அவருக்கு இருந்த பிறகும் கூட, அவர் இலக்கணத்தை அறிந்தவராகவோ அல்லது அரபி பண்டிதராக, அரபி நன்றாக தெரிந்தவராகவோ, மேலும் திருக்குர்ஆனின் பொருளையும் நல்ல முறையில் எடுத்துக் கூறக் கூடியவராகவும் இருந்தாலும் அவர் தமது ஆன்மாவைச் சீர்திருத்தவில்லை என்றால் திருக்குர்ஆனின் ஞானத்திலிருந்து அவருக்கு பங்கு கொடுக்கப்பட மாட்டாது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் பார்க்கின்றேன். இப்போது உலகத்தின் பார்வை உலக ஞானங்களின் பக்கம் குனிந்துள்ளது. மேலும் மேற்கத்திய ஒளியானது முழு உலகையும் தமது புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் வியாபாரத்தினால் வியப்பிற்குள்ளாக்கியுள்ளது. முஸ்லிம்களும் தமது முன்னேற்றத்திற்கான வழியைச் சிந்தித்தாலும் அவர்கள் மேற்கத்தியர்களைத் தமது இமாமாக ஆக்கி விட்டார்கள். மேலும் உலகத்தின் பக்கம் சாய்ந்து விட்டார்கள். மேலும் உலக முன்னேற்றமே அனைத்தும் என்று கருதி விட்டனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இது தற்போதைய முஸ்லிம்களின் நிலையாகும். ஆனால் எந்த மக்கள் தம்மைப் பழைய முஸ்லிம்கள் என்று கூறுகின்றார்களோ மேலும் தம்மைத்தாமே மார்க்கத்தின் வழிகாட்டி என்று கருதுகின்றார்களோ அவர்களது முழு வாழ்க்கையின் சாராம்சம் என்னவென்றால், அவர்கள் சர்ஃப் வ நஹூவின் சண்டையில் சிக்கியுள்ளார்கள். லாழ்லீன் என்ற சொல்லி இவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இலக்கணம் என்றால் என்ன? அரபிக்கு ஸர்ஃப் எது? நஹூ எது? மற்றும் திருக்குர்ஆனை எவ்வாறு சரியாக உச்சரிப்பது என்ற விஷயத்திலேயே இவர்கள் சண்டையிட்டு வருகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் பக்கம் இவர்களுக்கு எந்தக் கவனமும் இல்லை. அவ்வாறு எவ்வாறு இருக்கவும் முடியும்? ஏனென்றால் இவர்களுக்கு ஆன்மாவைச் சீர்திருத்துவதன் பக்கம் கவனமே இல்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: அஹ்மதிகள் இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது அவர்கள் உலகத்தின் பால் மூழ்கி விடக்கூடாது. மாறாக, திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 425–427)

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னாரிடம் ஒருவர், திருக்குர்ஆனை எவ்வாறு படிக்க வேண்டும்? என்று வினவினார். அதற்கு அன்னார் கூறினார்கள்: திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்தித்தவாறு படிக்க வேண்டும். நபிமொழியில் வந்துள்ளது: رُبَّ قَارٍ يَلْعَنُهُ الْقُرْآن அதாவது திருக்குர்ஆனை அழகாக ஓதக் கூடிய பலர் இருக்கின்றனர். ஆனால் திருக்குர்ஆன் அவர்களைச் சபிக்கின்றது. எவர் ஒருவர் திருக்குர்ஆனை ஓதி அதன்படி செயல்படுவதில்லையோ அவர் மீது திருக்குர்ஆன் சாபமிடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை ஓதும்போது அதில் கருணை தொடர்பான வசனத்தைக் கடந்து சென்றால் அதாவது அல்லாஹ்வின் கருணை தொடர்பாக கூறப்பட்டிருந்தால் பிறகு அங்கு அல்லாஹ்வின் கருணையை வேண்ட வேண்டும். மேலும் திருக்குர்ஆனில் எங்கு சமுதாயத்தின் அழிவு தொடர்பாக கூறப்பட்டுள்ளதோ அங்கு இறைவனது அழிவிலிருந்து அவனிடம் அடைக்கலம் கோர வேண்டும். தவ்ஃபா, இஸ்திஃபார் செய்ய வேண்டும். அல்லாஹ்விடம் அடைக்கலம் கோர வேண்டும். சிந்தித்து திருக்குர்ஆனைப் படிக்க வேண்டும். மேலும் அதன்படி நடக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 199,200)

ஆக இதுவே திருக்குர்ஆனைப் படிப்பதற்கான வழிமுறையாகும். ஆக இன்றைய நாட்களில் நமக்குத் திருக்குர்ஆனை ஓதுவதற்கான குறிப்பாக கவனம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த எண்ணத்தில் நாம் திருக்குர்ஆனை ஓதுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் கவனமாக இருங்கள். இறைவனது போதனை மற்றும் திருக்குர்ஆனுக்கு மாற்றமாக ஒரு அடி கூட எடுத்து வைக்காதீர்கள். நான் உறுதியாக கூறுகின்றேன். எவர்

ஒருவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையை விட்டு விட்டாலும் அவர் இரட்சிப்பின் கதவை தமது கைகளாலேயே அடைத்து விட்டார். உண்மையான மற்றும் இரட்சிப்பிற்குரிய வழிகளைத் திருக்குர்ஆன் திறந்து தந்துள்ளது. மேலும் மற்ற அனைத்தும் அதன் நிழலாகும். எனவே நீங்கள் திருக்குர்ஆனை ஆழ்ந்து, சிந்தித்து படியுங்கள். நீங்கள் எவரிடமும் செய்திராத அன்பைத் திருக்குர்ஆனின் மீது வையுங்கள். ஏனென்றால், இறைவன் என்னை நோக்கி, اَلْخَيْرُ كُلُّهُ فِي الْقُرْاٰنِ அதாவது எல்லா நன்மைகளும் திருக்குர்ஆனிலே இருக்கிறது என்று கூறியுள்ளான். இந்த விஷயமே உண்மையாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆனால் திருக்குர்ஆனை விட வேறு ஏதோவொன்றிற்கு முக்கியத்துவம் தருகின்ற அந்த மக்கள் மீது பரிதாபமே!

அன்னார் கூறுகின்றார்கள்: உங்களது அனைத்து முன்னேற்றம் மற்றும் இரட்சிப்பிற்கான நீரூற்றுத் திருக்குர்ஆனில் உள்ளது. உங்களுக்குத் தேவையான எந்த ஒரு விஷயமும் திருக்குர்ஆனில் காணப்படாமல் இல்லை. உங்களது ஈமானின் உண்மை மற்றும் பொய் ஆகிய நிலையை கியாமத் நாளன்று பிரித்தரிந்து காட்டக்கூடியது திருக்குர்ஆனே! திருக்குர்ஆனைத் தவிர உங்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய வேறு எந்தவொரு வேதமும் வானத்திற்கு கீழே இல்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் உங்கள் மீது மிகவும் கருணை காட்டியுள்ளான். திருக்குர்ஆனைப் போன்ற ஒரு வேதத்தை உங்களுக்கு வழங்கியுள்ளான். நான் உண்மையாகவே கூறுகின்றேன். உங்களுக்குப் படித்துக் காட்டப்பட்ட திருக்குர்ஆன் கிறித்தவர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டிருந்தால் அவர்கள் ஒருபோதும் அழிவிற்குள்ளாகியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அருட்கொடை மற்றும் நேர்வழி யூதர்களுக்கு தவ்ராத்திற்கு பதிலாக வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் கியாமத்தை மறுக்கக் கூடியவர்களாக இருந்திருக்க மாட்டார்கள். ஆக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அருட்கொடைக்கு கண்ணியம் அளியுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இது மிகவும் அன்பிற்குரிய அருட்கொடையாகும். இது மிகப்பெரிய பொக்கிஷமாகும். திருக்குர்ஆன் வந்திருக்கவில்லை என்றால் முழு உலகமும் ஒரு அசுத்தமான மரணித்த புழுவைப் போன்று இருந்திருக்கும். திருக்குர்ஆன் எத்தகைய வேதம் என்றால் இதற்கு எதிரில் மற்ற அனைத்து வழிகாட்டல்களும் ஒன்றுமற்றதாகும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 26,27)

எனவே திருக்குர்ஆனை படிப்பதற்கும், அதனை புரிந்து கொள்வதற்கும் அதன்படி செயல்படுவதற்கு நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. ரமலானில் பலருக்கு இதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. பிறகு இதனை தமது வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக ஆக்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹ் குறிப்பாக ரமலான் மாதத்தில் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் நம்பிக்கையாளர்களுக்குக் கவனமூட்டியுள்ளான்.

எனவே இந்த முயற்சி செய்கின்ற இந்த மாதத்தை கடந்தவாறு இந்த நாட்களில் நாம் திருக்குர்ஆனின் பக்கம் குறிப்பாகக் கவனம் செலுத்துவோம் என்றால் பிறகு பொதுவான நாட்களிலும் இதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கு பழக்கம் ஏற்படும். இல்லையென்றால் அல்லாஹ் ரமலான் மாதத்தில் திருக்குர்ஆனின் பக்கம் எந்த நோக்கத்திற்காகக் கவனம் செலுத்துமாறு கூறினானோ அது மரணித்து விடும். உண்மையான நம்பிக்கையாளர் நிரந்தர மனப்பான்மையுடன் நன்மைகளைத் தேடுகின்றார். மேலும் அதனை தொடரச் செய்கின்றான். ஆக இந்த மகத்துவமிக்க நேர்வழியை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நம் வரை எட்ட வைத்துள்ளான். இதனை நாம் நமது நேர்வழிக்கான காரணியாக ஆக்கிக் கொள்வதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு இந்த வசனத்திற்குப் பிறகு மேலும் தெளிவுபடுத்தியவாறு இந்த வழிகாட்டலை வழங்கியுள்ளான். அதாவது நோன்பைப் பேண வேண்டும். மேலும் நோயாளி மற்றும் பயணி ஆகியோர் விடுபட்ட நோன்பை பிறகு பூர்த்தி செய்ய வேண்டும். இது அவசியமாகும். ஃபித்யா செலுத்தினால் மட்டும் உங்களுக்கு விலக்கு கிடைத்து விடவில்லை. பயணம் மற்றும் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது நோன்பு வைப்பதிலிருந்து அல்லாஹ் உங்களுக்கு விலக்கு அளித்து உங்கள் மீது கருணை காட்டியுள்ளான். ஏனென்றால் அல்லாஹ் தனது அடியார்கள் மீது சுமையைச் சுமத்துவதில்லை.

மேலும் கூறுகின்றான்: நோன்பின் நாட்களில் குறிப்பாக அல்லாஹ்வின் மகத்துவத்தை எடுத்துக் கூறுவதிலும், அவனை துதிப்பதிலும், இறைவணக்கம் செய்வதிலும் கழிக்க வேண்டும். மேலும் அல்லாஹ் உங்களது நேர்வழிக்காக முழுமை பெற்ற எத்தகைய மகத்தான வேதத்தை உங்களுக்கு வழங்கியுள்ளான் என்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள். நன்றி செலுத்துதலானது, அதன்படி நாம் செயல்படும்போது நிறைவேறும்.

பிறகு அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: எனது அடியார்கள் என்னைத் தேடுபவர்கள் என்னைத் தேடியவாறு உம்மிடம் கேட்டால் நான் அருகில் இருக்கின்றேன். அவர்களது அழைப்பை நான் கேட்கின்றேன். அவர்கள் கலப்பற்ற முறையில் என்னிடம் கேட்டால் பிறகு நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் துஆ செய்யக் கூடியவர் எனது கூற்றை ஏற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது கட்டளைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் என்மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நாங்கள் துஆ செய்கின்றோம். நாங்கள் அதிகமாக துஆ செய்கின்றோம். ஆனால் அல்லாஹ் செவியேற்கவில்லை என்று சிலர் சில நாட்களிலேயே புகார் கூறத் தொடங்கி விடுகின்றனர். நாம் அல்லாஹ்வின் வழிகாட்டலைச் செவியேற்கவில்லை; மேலும் அதன்படி செயல்படவில்லை என்றால், அல்லாஹ்வின் அன்பை நாம் தேடவில்லை என்றால், மேலும் அவனது உண்மையான அடியாராக ஆகவில்லை என்றால், வெறும் கஷ்டம் வரும்போது மட்டும் அவனை அழைத்துப் பிறகு மறந்து விட்டால் பிறகு அல்லாஹ் நமது துஆக்களை செவியேற்கவில்லை என்று நம்மால் எவ்வாறு புகார் கூற முடியும்?

ஆக, முதலில் நாம் நம்மைச் சரி செய்ய வேண்டும். நம்மை நாம் சரி செய்வதற்கு முயற்சி செய்வதுடன் அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்காக துஆ செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அதற்காக துஆ செய்ய வேண்டும். பிறகு அல்லாஹ் நமது நிம்மதி மற்றும் அமைதிக்கான ஏற்பாடுகளையும் செய்வான். பிறகு தனது கலப்பற்ற அடியார்களின் துஆக்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதைப் போன்று நமது துஆக்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வான்.

ஆக, முதல் முயற்சி நம் தரப்பிலிருந்து இருக்க வேண்டும். ரமலான் மாதத்தில் நம்பிக்கையாளர்களுக்கு தனது நெருக்கத்தைப் பெறுவது மற்றும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான குறிப்பான ஏற்பாட்டை அல்லாஹ் செய்து விடுகின்றான். எனவே இதில் நாம் குறிப்பாக முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும். இல்லையென்றால் அவன் துஆக்களை செவியேற்கவில்லை என்று முறையீடு செய்வதற்கு நமக்கு உரிமை கிடையாது.

துஆ செய்வதன் வழிமுறை மற்றும் தமது நிலையை துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலைக்கு உருவாக்குவது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு வழிகாட்டியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: இது உண்மையான விஷயமாகும். அதாவது எவர் நற்செயல்களுடன் பணியாற்றவில்லையோ அவர் துஆ செய்வதில்லை. மாறாக, அவர் இறைவனைச் சோதித்துப் பார்க்கின்றார். எனவே துஆ செய்வதற்கு முன்பாக தமது அனைத்து ஆற்றல்களையும் செலவு செய்வது அவசியமாகும். இதன் பொருளே துஆ ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 124)

அன்னார் கூறுகின்றார்கள்: நாம் தினமும் துஆ செய்கின்றோம். மேலும் நாங்கள் தொழுகின்ற முழு தொழுகையும் துஆவே ஆகும் என்று ஒருபோதும் கருதாதீர்கள். எவ்வித சந்தேகமுமின்றி தொழுகை துஆ தான். ஆனால் துஆ செய்வதற்கான அந்த உண்மையான நிலைமை உருவாக வேண்டியது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைஞானத்திற்குப் பிறகு அருளின் மூலமாக ஏற்படுகின்ற அந்த துஆ, மேலும் அது தன்னுள் வேறொரு நிலையை கொண்டுள்ளது. அது மாய்த்துக் கொள்ளக்கூடிய ஒரு விஷயமாகும். அது உருக்கக்கூடிய கூடிய ஒரு நெருப்பாகும். அது கருணையை ஈர்க்கக்கூடிய ஒரு காந்தமாகும். அது மரணமாகும். இறுதியில் அது உயிர்ப்பிக்கக் கூடியதாகும். அது சூறாவளி ஆகும். ஆனால் இறுதியில் அது கப்பாலாக மாறி விடுகிறது. அது கடல் சூறாவளி ஆகும். ஆனால் அந்த சூறாவளி கப்பலாக மாறி பாதுகாப்பதற்கான காரணியாக அமைந்து விடுகிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: சீர்குலைந்த ஒவ்வொரு விஷயமும் அதன் மூலம் சரியாகி விடுகிறது. மேலும் ஒவ்வொரு விஷமும் இறுதியில் விஷ முறிப்பாக மாறி விடுகிறது. ஆக உண்மையான துஆ இவ்வாறு தாக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: துஆ செய்யக்கூடிய அந்த கைதி அருளுக்குரியவர் ஆவார். அவர் சோம்பல் அடைவதில்லை. ஏனென்றால் ஒரு நாள் அவர் விடுதலை பெறுவார். துஆ செய்யக்கூடிய அந்த குருடர்கள் அருளுக்குரியவர்கள். அவர்கள் சோம்பேறித்தனத்தை வெளிப்படுத்துவதில்லை. ஏனென்றால், ஒருநாள் அவர்கள் பார்ப்பார்கள். கபரில் இருக்கின்ற துஆ செய்தவாறு இறைவனிடம் உதவியை நாடுபவர்கள் அளுக்குரியவர்கள். ஏனென்றால் ஒரு நாள் கபரிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுவார்கள். அதாவது ஆன்மீகமான முறையில் மரணித்தவர்கள். துஆ செய்வதிலிருந்து சோம்பேறித்தனத்தை வெளிப்படுத்தாத நீங்கள் அருளுக்குரியவர்கள்.

மேலும் உங்களது ஆன்மா துஆவிற்காக உருகுகின்றது. மேலும் உங்களது கண்கள் கண்ணீர் வடிக்கின்றது. மேலும் உங்களது உள்ளத்தில் ஒரு நெருப்பை ஏற்படுத்தி விடுகின்றது. மேலும் நீங்கள் தனிமையின் இன்பத்தை உணர்வதற்காக இருள் நிறைந்த இடத்திற்கும், அமைதி நிறைந்த காட்டிற்கும் அது கொண்டு செல்கின்றது. மேலும் உங்களை நிம்மதியிழக்கச் செய்து பைத்தியக்காரனாக ஆக்கி விடுகிறது. ஏனென்றால் இறுதியில் உங்கள் மீது அருள் செய்யப்படும்.

நாம் அழைக்கின்ற அந்த இறைவன் மிகவும் கருணை காட்டக் கூடியவனும், உண்மையாளர்கள் மற்றும் பற்றுள்ள தனது அடியார்கள் மீது கருணை காட்டக் கூடியவன் ஆவான். ஆக நீங்களும் பற்றுள்ளவர்களாக ஆகி விடுங்கள். உண்மையுடனும், பற்றுடனும் துஆ செய்யுங்கள். அவன் உங்கள் மீது கருணை காட்டுவான். உலகத்தின் கூச்சலிருந்து தனியே சென்று விடுங்கள். மேலும் மன இச்சையின் சண்டைக்கு மார்க்கத்தின் வடிவத்தைக் கொடுக்காதீர்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: துஆ செய்யக் கூடியவருக்கு இறைவன் அற்புதத்தைக் காட்டுவான். மேலும் கேட்கக் கூடியவருக்கு வியக்கத்தக்க அருட்கொடை வழங்கப்படும். துஆ இறைவன் தரப்பிலிருந்து வருகின்றது. மேலும் இறைவன் பக்கமே செல்கின்றது. துஆவினால் உங்களது உயிர் உங்களுக்கு அருகில் இருப்பதைப் போன்று இறைவன் உங்களுக்கு அருகில் வந்து விடுகின்றான். துஆவினால் ஏற்படுகின்ற முதல் அருள் என்னவென்றால், மனிதனிடத்தில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்து விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: துஆ எத்தகைய தண்ணீர் என்றால்அது உட்புற அசுத்தங்களைச் சுத்தப்படுத்துகின்றது. அந்த துஆக்களுடன் ஆன்மா உருகுகின்றது. மேலும் தண்ணீரைப் போன்று பாய்ந்து இறைவனது இருப்பில் விழுகின்றது. மேலும் அது இறைவனிடத்தில் நிற்கவும் செய்கின்றது. ருகூவும் செய்கின்றது. சஜ்தாவும் செய்கின்றது. மேலும் இதன் நிழல் இஸ்லாம் கற்றுத் தந்துள்ள தொழுகையாகும்.

ஆன்மா நிற்பது என்பது, இறைவனுக்காக ஒரு கஷ்டத்தை பொறுத்துக் கொள்வதும், கட்டளைகளை ஏற்றுக் கொள்வது தொடர்பாகவும் ஒரு நிலைத்திருத்தலை வெளிப்படுத்துகின்றது. மேலும் அது ருகூ செய்வது என்பது அதாவது குனிவது என்பது, அந்த அனைத்து அன்பு மற்றும் தொடர்பை விட்டு விட்டு இறைவனிடம் குனிந்து வருகின்றது.

மேலும் இறைவனுக்காகவே ஆகி விடுகின்றது. மேலும் அது சஜ்தா செய்வது என்பது, அது இறைவனது சந்நிதானத்தில் விழுந்து தம்மையே மாய்த்துக் கொள்கின்றது. தமது இருப்பை அழித்து விடுகின்றது. இறைவனைச் சந்திக்கச் செய்கின்ற இதுவே தொழுகையாகும். மேலும் இஸ்லாமிய ஷரீஅத்தானது இதனைத் தொழுகையின் வடிவில் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

(லெக்சர் சியால்கோட், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 222–224)

ஆக, இந்த நிலையை நாம் நம்மிடத்தில் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் நாம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காட்சியைக் காண வேண்டும். ரமலானின் நோன்புகளுடன் இறைவணக்கத்தின் உண்மையான அருட்களையும் பெற வேண்டும். மேலும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காட்சியை நாம் காண வேண்டும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில் ஏதும் குறை இருப்பின் பிறகு அது நம்மிடத்தில் இருக்கின்ற குறையே ஆகும். இறைவனது கூற்று ஒருபோதும் தவறாக இருக்க முடியாது.

இன்றைய நாட்களில் நாம் நமது நிலைமைகளை சரிசெய்வதற்குக் குறிப்பாக துஆக்கள் செய்ய வேண்டும். முதலிலேயே அல்லாஹ் தனது அடியாருக்கு மிக அருகில் இருக்கின்றான். இன்றைய நாட்களில் மேலும் அருகில் வந்து விட்டான். தமது கடமையான இறைவணக்கம் மற்றும் நமது உபரியான இறைவணக்கத்தில் கலப்பற்ற முறையில் அல்லாஹ்விற்கு முன்பு நாம் குனிய வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த மாதத்தின் முதல் பத்து கருணையின் நாட்களாகும். நடுப்பத்து பாவமன்னிப்பிற்கான நாட்களாகும். மேலும் இறுதி பத்து நரகத்திலிருந்து இரட்சிப்பை வழங்குகின்ற நாட்களாகும்.

(கன்சுல் உம்மால் தொகுதி 8 பக்கம் 477 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் நம்மை அவனது உண்மையான அடியானாக ஆக்கியவாறு தமது கருணை மற்றும் பாவமன்னிப்பின் போர்வையில்

எடுத்துக் கொள்வானாக. இந்த மாதத்தில் நாம் அருட்களைப் பெறக் கூடியவர்களாகத் திகழ்வோமாக. இன்றைய நாட்களில் குறிப்பாக ஜமாஅத்திற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் தீமையை அவர்கள் பக்கமே திருப்புவானாக. மேலும் எங்கெல்லாம் ஜமாஅத்திற்கு எதிராகத் திட்டம் தீட்டப்படுகிறதோ அல்லாஹ் அங்கு அவர்களது திட்டங்களையும், சூழ்ச்சிகளையும் அவர்கள் பக்கமே திருப்புவானாக.

முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அநீதி இழைத்தல் மற்றும் ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டுவதிலிருந்து பாதுகாப்பானாக. மேலும் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வார்களாக. உலகத்தின் நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் மிக வேகமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அல்லாஹ் உலகிற்கும் அறிவை வழங்குவானாக. மேலும் இவர்கள் இறைவனை அடையாளங்கண்டு கொள்வார்களாக. இதன் மூலம் இந்த அழிவிலிருந்து பாதுகாப்பாக இருப்பார்களாக.

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இவர்களது மரணம் இரண்டு மாதத்திற்கு முன்பாக நடந்ததாகும். ஆனால் இப்போது தான் என் முன்னால் இவர்களது விவரங்கள் வந்துள்ளன. ஒருவரது பெயர், இஸ்லாமாபாதைச் சார்ந்த மர்ஹூம் அர்ஷதுல்லாஹ் பட்டி சாஹிப் பின் மகனான மதிப்பிற்குரிய டாக்டர் தாஹிர் அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும்.

இரண்டாவது ஜனாஸா அமெரிக்காவைச் சார்ந்த மர்ஹூம் டாக்டர் காஜா நதீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான டாக்டர் இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் இருவரும் ஃபதஹ் ஜன்கிற்கு அருகில் தமது நிலம் தொடர்பான விவகாரங்களைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தனர். அங்கு டாக்டர் இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்களின் ஒரு பணியாளன் 13 மார்ச் அன்று அவர்களை கடத்திய பிறகு இருவரையும் கொடூரமான முறையில் கொலை செய்து விட்டான். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அங்குள்ள கொலைக்காரர்களுக்கு, அஹ்மதிகளைக் கொலை செய்தால் நாம் பிடிக்கப்படுவோம் என்ற கவலை இருப்பதில்லை. ஏனென்றால், அஹ்மதிகளைக் கொலை செய்வது அவர்களது பார்வையில் நற்கூலிக்குரியதாகும். மேலும் மவ்லவிகளின் ஆதரவும் அவர்களுக்கு இருக்கின்றது. அவர்கள் இவர்களைக் காப்பாற்ற முயற்சி செய்வர். முழுமையாக முயற்சி செய்வார்கள். இதன்அடிப்படையில் இவர்களை நாம் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றிருப்பதாகக் கூற முடியும்.

டாக்டர் தாஹிர் அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் 27 நவம்பர் 1967 ஆம் ஆண்டு பிறந்தார்கள். அவர்களது குடும்பத்தில் அவர்களது பாட்டனார் குர்தாஸ்பூர் மாவட்டத்தின் லூதி நங்களைச் சேர்ந்த ஹஸ்ரத் மவ்லவி நூர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் குஃப்ர் ஃபத்வாவில் ஹஸ்ரத் மவ்லவி நூர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கையொழுத்திட மறுத்து விட்டார்கள். மேலும் இது தொடர்பாக அன்னார் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கு எழுதிய கடிதம் 10 அக்டோபர் 1897 ஆம் ஆண்டு அல் ஹகமின் முதல் இதழில் அச்சிடப்பட்டுள்ளது.

(அல்ஹகம் 8 அக்டோபர் 1897 பக்கம் 5,6)

மர்ஹூம் மெட்ரிக் முடித்த பிறகு இஸ்லாமாபாதிலுள்ள ஹோமியோபேதிக் மெடிக்கல் காலேஜில் DHMS தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். பிறகு சட்டா பஹ்தாவரில் பிராக்டிஸ் செய்தார்கள். அனைவராலும் விரும்பப்படுகின்ற மருத்துவர் ஆவார். தன்னலமற்ற மனிதர் ஆவார். ஒரு குறிப்பிட்ட காலம் வரை அன்னாரது வீடு தொழுகை சென்டராக பயன்படுத்தப்பட்டு வந்தது. கிலாஃபத்துடன் மிகவும் நேசத்திற்குரிய தொடர்பை வைத்திருந்தார்கள்.

அன்னாரது மரணத்தின்போது ஜமாஅத்தைச் சாராத எண்ணற்ற ஆண்களும், பெண்களும் தமது வருத்தத்தை தெரிவித்தார்கள். அன்னாரது மரணத்தை சமுதாயத்திற்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாக குறிப்பிட்டார்கள். அன்னார் தமக்குப் பின்னால் அவர்களது மனைவி, இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகனை நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களது மகன் லண்டனில் இருக்கின்றார். ரானா காலித் சாஹிபின் மருமகன் ஆவார்கள். அவர்களது மூத்த சகோதரர் ஃபைஸல் அய்யாஸ் சாஹிப் வாழ்க்கையை அர்ப்பணித்த முரப்பி ஆவார். முதலில் M.T.A வில் தொண்டாற்றிக் கொண்டிருந்தார். தற்போது ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இருக்கின்றார்.

இரண்டாவது ஜனாஸா மர்ஹூம் குஜ்ரான்வாலா மாவட்டத்தின் திர்கடி மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் முஹம்மது ஜமால் சாஹிப் அவர்களின் பேரனாவார். இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் அன்னாரது பாட்டனாரான காஜா ஜலாலுத்தீன் சாஹிப் அவர்கள் மூலமாக அவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. அன்னாரது தந்தை காஜா நதீர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் கெமிஷ்டரி பாடம் நடத்துவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

மர்ஹூம் டாக்டர் சாஹிப் King Edward Medical College ல் MBBS முடித்த பிறகு ஏறக்குறைய மூன்று வருடங்கள் நாயிஜேர்யாவிலுள்ள அஹ்மதிய்யா கிளினிக்கில் தொண்டாற்றும் நற்பேற்றைப் பெற்றார்கள். மூன்று வருடத்திற்குப் பிறகு அமெரிக்கா சென்று விட்டார்கள். அங்கு அவர்கள் MD செய்தார்கள். அதற்குப் பிறகு ஏறக்குறைய 15 ஆண்டுகள் பாகிஸ்தானில் இருந்த பிறகு இங்கு வந்தார்கள். பிறகு இங்கு 15 ஆண்டுகள் இருந்தார்கள். பிறகு மூன்று வருடத்திற்கு முன்பாக இங்கிருந்து அமெரிக்கா சென்று விட்டார்கள். அங்கு கலிஃபோர்னியாவில் அவர்கள் தமது தேர்வில் தேர்ச்சி பெற்று அங்கேயே பணி செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு குழந்தைகளின் காரணமாக பாகிஸ்தான் சென்றார்கள். அன்னார் ஏழைகளுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் இருந்து வந்தார்கள். பொருள் தியாகத்திலும் முன்னிலையில் இருந்தார்கள். மேலும் கலப்பற்றத் தன்மை கொண்ட ஒரு நபராவார்கள்.

குடும்பத்தில் தமது மனைவி மட்டுமின்றி மூன்று மகள்களை நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் இரண்டு மர்ஹுமீன்களுடனும் கருணை மற்றும் மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. மேலும் இவர்களது குழந்தைகளுக்கும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தோடு ஒன்றியிருக்கச் செய்வானாக.


**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் 10 நவம்பர் 2017 அன்று ஆற்றிய குத்பா ஜுமுஆ பேருரையிலிருந்து...**

எந்த ஒரு சமுதாயத்தின் பகைமையும் உங்களை நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்யாத வண்ணம் இருக்க நிர்பந்திக்கக் கூடாது. நீங்கள் நீதியின் தேட்டங்கள் எல்லா நிலையிலும் நிறைவேற்ற வேண்டும். நீதியின் தேட்டங்கள் நிறைவேற்றப்படாததன் விளைவாகவே அநீதிகளும் அதிகரித்து வருகின்றன

Faizal Hameed Ilahi
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## குறிப்பாக செய்ய வேண்டிய துஆக்கள்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 15.06.2018 அன்று லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய குத்பா ஜுமுஆ பேருரையில் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள துஆக்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களை எடுத்துக் கூறியவாறு இன்றைய நாட்களில் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை ஓதி வருமாறு வழிகாட்டியுள்ளார்கள். அந்த துஆக்களிலிருந்து....

قُلْ رَّبِّ اِمَّا تُرِيَنِّيْ مَا يُوْعَدُوْنَ - رَبِّ فَلَا تَجْعَلْنِيْ فِي الْقَوْمِ الظّٰلِمِيْنَ

அதாவது என் இறைவா! அவர்களிடத்து வாக்களிக்கப்படுவதை நீ என் வாழ்நாளிலேயே காண்பிப்பதாயின் நீ அநீதியிழைக்கும் சமுதாயத்தைச் சார்ந்தவனாக ஆக்கி விடாதிருப்பாயாக. (23;94,95)

رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَّعِلْمًا فَاغْفِرْ لِلَّذِيْنَ تَابُوْا وَاتَّبَعُوْا سَبِيْلَكَ وَقِهِمْ عَذَابَ الْجَحِيْمِ - رَبَّنَا وَاَدْخِلْهُمْ جَنّٰتِ عَدْنِ ِالَّتِيْ وَعَدْتَّهُمْ وَمَنْ صَلَحَ مِنْ اٰبَآئِهِمْ وَاَزْوَاجِهِمْ وَذُرِّيّٰتِهِمْ - اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ - وَقِهِمُ السَّيِّاٰتِ - وَمَنْ تَقِ السَّيِّاٰتِ يَوْمَئِذٍ فَقَدْ رَحِمْتَهٗ - وَذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ

அதாவது எங்கள் இறைவா! நீ (உனது) கருணையாலும் அறிவாலும் எல்லாப் பொருள்களையும் சூழ்ந்து நிற்கிறாய். எனவே, நீ கழிவிரக்கங் கொண்டு உன் வழியைப் பின்பற்றுபவர்களை மன்னித்து நரக தண்டனையிலிருந்து அவர்களை காப்பாற்றுவாயாக. எங்கள் இறைவா! நீ அவர்களையும், அவர்களின் மூதாதையர்களையும், அவர்களின் மனைவியர்கள், அவர்களின் குழந்தைகள் ஆகியவர்களுள் நல்லவர்களையும் நீ அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ள நிலையான தோட்டங்களில் நுழையச் செய்வாயாக. நிச்சயமாக நீ வல்லமையுள்ளவனும் ஞானமிக்கவனும் ஆவாய். நீ அவர்களை தீமையிலிருந்து காப்பாற்றுவாயாக. அந்நிலையில் நீ தீமைகளிலிருந்து காப்பாற்றுகின்றாயோ அவருக்கு நிச்சயமாக நீ கருணை காட்டி விட்டாய். இது மாபெரும் வெற்றியாகும். (23:8–10)

رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ اٰمَنُوْا رَبَّنَآ اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ

அதாவது எங்கள் இறைவா! எங்களையும் எங்களுக்கு முன்னர் நம்பிக்கை கொண்ட சகோதரர்களையும் மன்னித்தருள்வாயாக. மேலும் நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு எதிராக எங்கள் உள்ளங்களில் எத்தகைய வெறுப்பும் ஏற்படாதிருக்கச் செய்வாயாக. எங்கள் இறைவா! நிச்சயமாக நீ அதிகமாக பரிவு காட்டுபவனும் மென்மேலும் கருணை காட்டுபவனுமாவாய். (59:11)

رَبِّ اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ مُؤْمِنًا وَّلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ - وَلَا تَزِدِ الظّٰلِمِيْنَ اِلَّا تَبَارًا

அதாவது என் இறைவா! என்னுடைய பெற்றோரையும் என் வீட்டில் நம்பிக்கை கொண்டவராக நுழைபவரையும், நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் மன்னிப்பாயாக. அநீதியிழைப்பவர்களுக்கு அழிவையே அதிகரிப்பாயாக. (71:29)

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ - اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

அதாவது எங்கள் இறைவா! நீ உன் தூதர்கள் மூலம் எங்களுக்கு வாக்களித்தவற்றை (எல்லாம்) எங்களுக்கு தருவாயாக. மேலும் மறுமை நாளில் எங்களை இழிவுபடுத்தாதிருப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதியை மீறுவதில்லை. (3:195)

اَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الْغَافِرِيْنَ

அதாவது நீ எங்கள் உதவியாளனாக இருக்கின்றாய். எனவே நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டுவாயாக. மன்னிப்பவர்களுள் எல்லாரையும் விட நீயே சிறந்தவனாவாய். (7:156)

رَبَّنَا اصْرِفْ عَنَّا عَذَابَ جَهَنَّمَ اِنَّ عَذَابَهَا كَانَ غَرَامًا

எங்கள் இறைவா! எங்களிடமிருந்து நரகத் தண்டனையை அகற்றி விடுவாயாக; ஏனெனில் அதன் தண்டனை ஒரு பெரும் வேதனையாகும். (25:66)

رَبَّنَآ اِنَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே நீ எங்களுக்கு எங்களை பாவங்களை மன்னித்தருள்வாயாக. எங்களை நரக தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. (3:17)

رَبِّ اجْعَلْنِيْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِيْ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ - رَبَّنَا اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ

என் இறைவா! என்னையும் என் சந்ததிகளையும் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக ஆக்குவாயாக. எங்கள் இறைவா! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக. என் இறைவா! கேள்வி கணக்கு நிகழும் நாளில் எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டோர்கள் எல்லோருக்கும் நீ மன்னிப்பை வழங்குவாயாக. (14:41,42)

رَبِّ نَجِّنِيْ وَاَهْلِيْ مِمَّا يَعْمَلُوْنَ

அதாவது என் இறைவா! என்னையும் என் குடும்பத்தினரையும் அவர்களது செயல்களிலிருந்து காப்பாற்றுவாயாக. (26:170)

رَبِّ اِنَّ قَوْمِيْ كَذَّبُوْنِ - فَافْتَحْ بَيْنِيْ وَبَيْنَهُمْ فَتْحًا وَّنَجِّنِيْ وَمَنْ مَّعِيَ مِنَ الْمُؤْمِنِيْنَ

அதாவது என் இறைவா! என் சமுதாயத்தினர் என்னைப் பொய்யாக்கி விட்டனர். நீ எனக்கும் அவர்களுக்கும் இடையில் இறுதியான தீர்ப்பு வழங்கி என்னையும் என்னுடன் உள்ள நம்பிக்கை கொண்டவர்களையும் (எதிரிகளின் தீங்கிலிருந்து) காப்பாற்றுவாயாக. (26:118,119)

رَبِّ انْصُرْنِيْ عَلَى الْقَوْمِ الْمُفْسِدِيْنَ

அதாவது என் இறைவா! இந்தக் குழப்பக்காரர்களான சமுதாயத்திற்கு எதிராக எனக்கு உதவி செய்வாயாக.(29:31)


### திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 13 June 2019 Issue No. 24

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் 2019 –ற்கான மாணவர் சேர்க்கை

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட இந்த அருளுக்குரிய ஜாமிஆவிலிருந்து தற்போது வரை நூற்றுக்கணக்கான மார்க்க அறிஞர்களும், கண்ணியத்திற்குரிய ஆலிம்களும் வெளிவந்து முழு உலகிற்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைக் கொண்டு சேர்ப்பதில் தமது கடமையை நிறைவேற்றி வருகின்றனர். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அருளுக்குரிய மார்க்க நிறுவனத்தில் மார்க்கக் கல்வியைப் பெற்று மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

எனவே ஹுஸூர் அவர்களின் மேற்கோளின் ஒளியில் அதிகம் அதிகமான வாக்கிஃபே நவ் மற்றும் வாக்கிஃபீனே நவ்வைச் சாராத மாணவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்து மார்க்கக் கல்வியைப் பெற்று மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு தம்மைத்தாமே அர்ப்பணிக்க வேண்டும். எனவே ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இணைய விரும்புபவர்கள் இந்திய வக்ஃபே நவ் துறையைத் (நஸாரத் தஃலீம்) தொடர்பு கொள்ளவும். மேலும் விரைவாக சேர்க்கைப் படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து ஜூன் 30 ஆம் தேதிக்குள் இந்திய வக்ஃபே நவ் (நஸாரத் தஃலீம்) அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நுழைவுத் தேர்வு 15 ஜூலை 2019 அன்று நடைபெறும்.

**சேர்க்கைக்கான நிபந்தனைகளாவன:**

1. மெட்ரிக் தேரியவருக்கு 17 வயதும், +2 தேரியவருக்கு 19 வயதும் இருக்க வேண்டும். திருக்குர்ஆன் மனனம் செய்தவருக்கு விதிவிலக்காக சலுகையும் உண்டு.

2. *National Carieer Planing Committee wa¹fe nau Bharat* ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நுழைவுத் தேர்வில் பங்கு பெறும் மாணவர்களிடம் எழுத்துத் தேர்வை நடத்தும். பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு தேர்ந்தெடுக்கும். எழுத்துத் தேர்வில் திருக்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாம், அஹ்மதிய்யத், மார்க்க அறிவு, அரபி, உர்து, கணிதம், ஆங்கிலம் மற்றும் பொது அறிவு *(General Knowledge)* தொடர்பான கேள்விகள் கேட்கப்படும்.

3. எழுத்துத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு நூர் மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனை நடைபெறும். மாணவரின் எழுத்துத் தேர்வு மற்றும் மருத்துவ பரிசோதனையில் *Medical Report* திருப்திகரமாக இருக்கும் நிலையில் பிறகு ஹுஸூர் அவர்களின் ஒப்புதலுக்குப் பிறகு ஜாமிஆவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

4. கிராஜுவேட் செய்துள்ள மாணவர்களுக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் முன்னுரிமை வழங்கப்படும்.

மாவட்ட அமீர்மார்கள், ஜமாஅத்தின் அமீர்மார்கள், சத்ர் ஜமாஅத், முபல்லிக்மார்கள், முஅல்லிம்மார்களிடம் விண்ணப்பிக்கப் –படுவதாவது, நல்ல, தகுதி வாய்ந்த மார்க்க அறிஞர்கள் மற்றும் முபல்லிக்குகள் ஆவதற்குரிய மனவளமும், திறமையும், மார்க்கத் தொண்டாற்றும் உணர்வும் கொண்ட, நன்மையின் பால் ஈர்ப்புள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து சேர்க்கைக்கான பாடத்திட்டத்தை நன்றாக ஆயத்தம் செய்வித்து, குறிப்பிட்ட தேதிக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு அனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். மேலும் அத்தகைய மாணவர்களின் சேர்க்கைப் படிவத்தை விரைவாக பூர்த்தி செய்து இந்திய வக்ஃபே நவ் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். சேர்க்கைப் படிவத்தை *Email* மூலமாக பெற்றுக் கொள்வதற்கான *Mail Id: waqfenau@qadian.in*

*INCHARGE WAQF-E-NAU DEPARTMENT*
*OFFICE WAQF-E-NAU INDIA (NAZARAT TALEEM)*
*M.TA BUILDING, CIVIL LINE, QADIAN*
*DISTRICT: GURDASPUR, PUNJAB (INDIA) PIN:143516*
*CONTACT: 01872-500975, 9988991775*
(நாஸிர் தஃலீம் & சத்ர் நேஷனல் பிளானிங் கமிட்டி வக்ஃபே நவ் பாரத்)

**காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad